பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 28 வியாழக்கிழமை 10.02.2022 கதிர் 97


### இனி இது ரகசியம் அல்ல!

'எல்லா வினைக்கும் எதிர் வினை உண்டு' - என்பார்கள். அரசியலிலும் அப்படித்தான் போலும்.

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தினசரி தொகுதி கள், தொகுதிகளாக 'விசிட்' அடித்து மக்களைச்

2



## சர்வதேச சக்திகளுடன் இணைந்து அரசைக் கவிழ்ப்பதற்குச் சதி முயற்சி

### 'முதலாவது பொதுஜன பேரணி' நிகழ்வில் ஜனாதிபதி குற்றச்சாட்டு

மஹிந்தராஜபக்ஷஅரசைக் கவிழ்ப்பதற்கு அன்று செயற் பட்டது போன்றே, தேசிய மற் றும் சர்வதேச சக்திகளுடன் இணைந்து தற்போதைய அர சின் பயணத்தைத் தடுப்பதற் கான சதி முயற்சிகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ குற்றஞ்சாட் டினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன 2

# மீண்டும் நாட்டை முடக்க இடமளிக்க வேண்டாம்!

## மக்களைத் திரட்டிக் கதறிய கோட்டாபய



கொழும்பு, பெப்ரவரி 10

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலின் மத்தியில் நாட்டை மீண்டும் மூடுவதற்கு இட மளிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுப் பேரணி களின் 'முதலாவது பொதுஜன பேரணி' நிகழ் வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். 2





## முடிந்தால் அடுத்த தேர்தலில் வெற்றியடைந்து காட்டுங்கள்

### சஜித் அணிக்கு மஹிந்த பகிரங்க சவால்

முடிந்தால் எதிர்க்கட்சியை அடுத்த தேர்தலில் வென்று காட் டுமாறு சவால் விடுக்கின்றேன்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணியால் ஏற்பாடு செய்யப்பட் டுள்ள பொதுப் பேரணிகளின் 'முதலாவது பொதுஜன பேரணி' நிகழ்வு நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் 10

## புலிகளுக்கு முடிவுகட்டினார் மஹிந்த; கொரோனாவைத் தடுத்தார் கோட்டா

### இப்படிக் கூறுகின்றார் ஜோன்ஸ்டன்

தோற்கடிக்கவே முடியாது எனக் கூறப்பட்ட தமிழீழ விடுத லைப்புலிகள் அமைப்பையே தோற்கடித்த தலைவர்தான் பிர தமர் மஹிந்த ராஜபக்ஷ. அதே போல் கொரோனா 10

## மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா உடனடி நடவடிக்கை எடுக்கும்

### தூதரக அதிகாரியின் வாக்குறுதியையடுத்து பிரேரணையை வாபஸ் பெற்றது முன்னணி

இந்தியத்தூதரகஅதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க மீனவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அவர்களது முயற்சிக்கு ஒத்துழைக்கும் வகையில் 10

## கிளிநொச்சியில் 8 இந்தியப் படகுகள் 94,300 ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டம், கிராஞ்சியில் இருந்த 8 இந்தியப் படகுகளும் நேற்று 94 ஆயி ரத்து 300 ரூபாவுக்கு ஏலமிடப்பட்டது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த வேளை மடக்கப்பட்ட இந் திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் தற் போது ஏலத்தில் விடப்படுகின்றன. 2




Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்


## இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 11 கிலோ 'ஐஸ்' சென்னையில் சிக்கியது; பாகிஸ்தானுடன் சம்பந்தம்

### கைதான ஆறு பேரில் மூவர் இலங்கை முஸ்லிம்கள்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.10

இந்தியாவின் ஊடாக இலங் கைக்குக் கடத்த முயன்றாகக் கருதப்படும் - பல கோடி ரூபா பெறுமதியான - 11 கிலோ ஐஸ் போதைப்பொருள் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சந்தித்துப் பேசி வருகின்றார். வடக்கிலும் அண்மையில் இரண்டு, மூன்று நாள்கள் அவர் மினக்கெட்டு தொகுதிகள் தோறும் கூட்டங்கள் நடத்தியமை வாசகர்களுக்கு நினைவில் இருக்கலாம்.

அந்த வகையில் முந்திய வாரம் அநுராதபுர மாவட்டக் கிராமங்கள் தோறும் அவர் 'விசிட்' அடித்தார். தற்போது ஆளும் தரப்புக்கு எதிராக நாடெங்கும் பொங்கி வரும் எதிர்ப்பு அலை காரணமாக அநுராதபுரத்தில் சஜித் பல இடங்களிலும் கூட்டிய கூட்டங்களில் மக்கள் அலை மோதினர். எல்லாம் தானாகக் கூடிய கூட்டம். கூட்டி வரப்பட்ட கூட்டம் அல்ல.

குழம்பிப் போன அரசுத் தரப்பு பதில் நடவடிக்கையை ஆரம்பித்தது. மாகாணம் தோறும் பிரசார நடவடிக்கை என்று தனது கைவரிசையைத் தொடங்கியது.

அந்த வரிசையில் முதல் கூட்டம் நேற்று அநுராதபுரத்தில். எதிர்பார்க்கப்பட்ட படி கூட்டிய கூட்டம் என்பதால், அதிக தலைக் கறுப்பு கூட்டத்தில் தென்பட்டது. போக்குவரத்துச் சபைக்குக் கட்டணம் கட்டி, வாடகைக்கு அமர்த்தி, ஆள்களைக் கூட்டத்துக்கு ஏற்றி வரப் பயன்படுத்தப்பட்டவை மட்டும் 225 பஸ்கள். கட்டணம் கட்டாமல் 'ஓசி'யில் பயன்படுத்தப்பட்டவை, தனியார் பஸ்கள் என்பன வேறு பட்டியல்.

இதில் முக்கிய விசேஷம் – ஆக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை – மொட்டுக் கட்சியை – சேர்ந்த தலைவர்கள் மாத்திரமே இதில் பங்கு பற்றினர் என்பது தான். அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளோ அவற்றின் தலைவர்களோ இக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை. ஆளும் கட்சிக்குத் தனித்து இன்னும் செல்வாக்குத் தாராளமாக உண்டு என்பதை பங்காளிக் கட்சிகளுக்குக் காட்டுவதும் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டதன் நோக்கம் என்கின்றன உள்வீட்டு வட்டாரங்கள்.

ராஜபக்ஷ சகோதர்கள் மூவர் –கோட்டா, மஹிந்த பஸில் – ஆகியோரே பிரதான பேச்சாளர்கள். கோட்டாபயராஜபக்ஷவின் அரசியல் வகிபாகத்தை உறுதிப்படுத்துவது கூட்டத்தின் நோக்கம் என்கின்றன கட்சி வட்டாரங்கள்.

எனக்கு என்னவோ ஆளும் தரப்பின் இந்த நடவடிக்கை – மக்கள் செல்வாக்கை இழந்து, பெரும் எதிர்ப்பைச் சம்பாதித்த பின்னர் – இப்படி 'பந்தா' காட்டுவது 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடும் வேலை' போலவே தோன்றுகின்றது.

★ ★ ★

'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடுவது' என்று எழுதும் போது இன்னொரு விடயமும் நினைவுக்கு வருகின்றது.

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தவை என்ற குற்றச்சாட்டில் தடுக்கப்பட்ட இந்திய – தமிழக – மீனவர்களின் கடற்கலங்களை இலங்கைத் தரப்பு பகிரங்க ஏலத்தில் விடப் போகின்றது என்ற செய்தியை 'காலைக்கதிர்' நாளிதழ்தான் முதன் முதலில் விலாவாரியாக மற்றும் நேர விவரங்களுடன் வெளியிட்டிருந்தது. வாசகர்களுக்கு அது நினைவிருக்கலாம்.

அது அறிவித்து, அறிவிக்கப்பட்ட படகுகளில் கணிசமானவை – 90 வீதமானவை – பகிரங்க ஏலத்தில் விற்றுமாகி விட்டது. நாளையுடன் முழுவதும் விற்றாகி விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வளவு காலமும் ஒன்றும் செய்யாத இந்தியத் தூதரகம் இப்போது ஒரு தகவல் – ஒரு குறிப்பு – வெளியிட்டிருக்கின்றது.

"மீனவர்களின் படகுகள் விடயத்தில் இலங்கைக்கும் – இந்தியாவுக்கு இடையில் அரசுகள் ரீதியான இரு தரப்புப் புரிந்துணர்வு உண்டு. அதன்படி, மீட்கப்பட முடியாத படகுகள் தொடர்பில் தமிழக மீனவர்கள் நேரில் வந்து பார்த்து ஒரு முடிவு கட்ட வேண்டும். அந்த மீனவர்களின் வருகைக்கான அனுமதியை இலங்கை அரசிடம் இந்தியத் தூதரகம் அண்மையிலும் கோரியிருந்தது." – என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதாவது, அந்தப் படகுகள் – தமிழக மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டவை – இன்னும் தமிழக மீனவர்களுடையவை என்றே இந்தியா கருத்துகின்றது. அதனை அவர்கள் எப்படி மீட்டுக் கொண்டு செல்ல வேண்டும் என்பதுதான் இன்னும் தீர்மானிக்கப்படாத விடயமாக உள்ளது என்பது இந்தியத் தூதரகத்தின் நிலைப்பாடு.

ஆனால், இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்டமையால் அந்தப் படகுகள் இலங்கைச் சட்டங்களின்படி இலங்கை அரசுடைமையாக்கப்பட்டு விட்டன, அதனால் இலங்கை அரசின் முடிவின்படி அவை பகிரங்க ஏலத்தில் விடப்பட்டுள்ளன என்பது கொழும்பு ஆட்சிப் பீடத்தின் கருத்து.

இந்த முரண்பாட்டிற்கு இராஜதந்திர ரீதியில் எப்படித் தீர்வு காணப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை. நெருக்கடியாகத்தான் விடயம் இருக்கப் போகின்றது என்பது தெளிவு.

அதுவும், படகுகள் இலங்கைச் சட்டப்படி பகிரங்க ஏலத்தில் விற்று முடித்த பின்னர், ஆரம்பத்தில் இருந்து கதையைத் தொடங்க முயற்சிப்பது, 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடும் கதையாகவே' தோன்றுகின்றது.

இந்த நெருக்கடியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைதான் சிக்கிக் கொண்டு அல்லல் படப் போகின்றது என்பது நிச்சயம்...!

★ ★ ★

என் கொழும்பு நண்பர் ஒருவர் நேற்று மாலை எமது பத்திரிகையைப் பார்த்து விட்டு தொலைபேசி அழைப்பு எடுத்தார். கையோடு பட்டென்று ஒரு கேள்வி கேட்டார்.

"இப்போது சொல்லுங்கள் இந்தியக் கைக்கூலி யார்?" – என்று சூடாகக் கேட்டார்.

அவர் சீற்றத்தைத் தணிப்பதற்க நக்கலாக "நான் இல்லை, ஐயா...!" – என்றேன். அவர் சிரித்தார்.

"இந்திய மீனவர் தகராறு தொடர்பாக இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் இருந்தது. இந்தியத் தூதரகத்தி ன் ஓர் அதிகாரி கூறியதும், விவாதத்தையே வாபஸ் பெற்றவர்கள் இந்தியக் கைக் கூலிகளா அல்லது இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக இலங்கை அரசுடன் தான் செய்து கொண்ட ஒப்பந்தப்படி உரியதைத் தமிழர்களுக்குச் செய்யும்படி ஒன்றாகச் சேர்ந்து இந்தியாவை வலியுறுத்திய தமிழ்க் கட்சிகள் இந்தியக் கைக்கூலிகளா?" – என்று என் மீது சீறினார் அந்த நண்பர். நான் ஏதோ இது விடயத்தில் 'ஜட்ஜ்' என்று நினைத்துக் கொண்டார் போலும்.

நானும் என் பங்குக்கு சில விடயங்களைப் போட்டுக் கொடுத்து அவரைச் சூடாக ஏற்றி விட்டேன்.

"ஓமோம். நாடாளுமன்ற அலுவல்கள் குழுவின் கூட்டம் திங்களன்று நடைபெற்றது. அதில் பங்குபற்றிய தமிழ்க் கூட்டமைப்பு பிரதிநிதி சுமந்திரன் இவ்வார நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளைப் பிரரேணை விவாதத்தை முன்னெடுக்கும் வாய்ப்பு தங்களுக்குத் தரப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவிடம் கேட்டார் – மீனவர் பிரச்சினையை முன்வைத்து விவாதம் நடத்தும் நோக்குடன். ஆனால் இந்த வார நாடாளுமன்ற அமர்வில் அந்த வாய்ப்பு எதிர்க்கட்சிகளுக்கு ஒன்றே ஒன்று என்பதால், அதனை இம்முறை தரமுடியாது என்றும், மாத இறுதியில் வரும் அடுத்த கூட்டத் தொடரில் அது கூட்டமைப்புக்கு ஒதுக்கப்படும் என்றும் கிரியெல்ல கூறினார். அதனை சுமந்திரன் ஏற்றுக் கொண்டார். அந்த வாய்ப்பைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பெற்றுக் கொண்டது. இவ்வளவு காலமும் இப்படி ஒத்திவைப்புவேளைப் பிரேரணைக்கு அக்கட்சி வேண்டுதல் ஏதும் தராததால், இம்முறை கேட்டபோது அதற்குக் கொடுக்க வேண்டும் என்று லக்ஷ்மன் கிரியெல்ல தீர்மானித்திருப்பார் போலும். எனினும் தாம் வெளிப்படுத்த முயன்ற அதே விடயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரேரணையில் எடுக்கப் படுவதால் அதில் உரையாற்றி தங்கள் கருத்துகளை முன்வைப்பதற்கு சுமந்திரன், சாணக்கியன் போன்றோர் தயாராக இருந்தனர். இதன் மூலம் வடக்கு மீனவர்களின் நிலையை தேசிய ரீதியில் பலரின் கவனத்துக்கும் கொண்டு வரமுடியும் எனக் கூட்டமைப்பினரும் காத்திருக்க, இந்தியத் தூதரகத்தின் பேச்சைக் கேட்டு, வாலைச் சுருட்டி, இந்தியத் தரப்பிடம் நல்ல பெயர் வாங்கி விட்டது சைக்கிள் கட்சி...!" – என்று நன்றாக உசுப்பேற்றி விட்டேன் நான்.

அவர் எந்தச் சைக்கிளுடன் போய் முட்டிமோதுகின்றாரோ தெரியவில்லை.

மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும் என்பார்கள். தமிழர் அரசியல் இருக்கும் வரை இந்த 'துரோகி', 'கைக்கூலி' பட்டங்களும் நீடிக்கும் என்பது நிச்சயம் – இது என் கணிப்பு. வாசகர்களே! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்...?

– மின்னல் –

## மீண்டும் நாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் அநுராதபுரம் சல்காது மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் இந்தப் பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் மஹா சங்கத்தினர், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், வடமத்திய மாகாண ஆளுநர், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், நகர சபை, பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

சமூக இடைவெளி உள்ளிட்ட எந்தச் சுகாதார நடைமுறையும் இதில் பின்பற்றப்படவில்லை எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி,

உரம் அல்லது உரம் இல்லாமலேயே விவசாய சமூகத்தின் வருமானத்தை நூறு வீதம் அதிகரிப்பேன் என்பதைக் கூறிக்கொள்கின்றேன். இன்று நெல்லுக்குச் சிறந்த விலை உள்ளது.

அபகரிக்கப்பட்ட நிலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. விவசாய சமூகத்துக்காக என்னை அர்ப்பணிக்க நான் தயாராக இருக்கின்றேன் என்ற உறுதிமொழியையும் வழங்குகின்றேன்.

விவசாயத்துக்கு எதுவும் செய்யாதவர்கள் இன்று விவசாயிகளை ஏமாற்றி, நாட்டைப் பாதாளத்துக்கு இழுக்க முயற்சிக்கின்றனர்.

பயங்கரவாதிகளிடமிருந்து இந்த நாட்டை மஹிந்த ராஜபக்ஷ மீட்டார். அதன்பின்னர் வேகமாக அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், 2015 இல் போலியான தகவல்கள் மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. இராணுவத்தினர் காட்டிக்கொடுக்கப்பட்டனர். பிக்குகள் நீதிமன்றம் அழைத்துச் செல்லப்பட்டனர். இந்நிலைமையை நாம் மாற்றியமைத்தோம். தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய மரபுரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

அனைவரும் மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுங்கள். நாட்டை மீண்டும் முடக்குவதற்கு இடமளிக்க வேண்டாம் – என்றார்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மிகவும் ஆவேசமாக உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச சக்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுப் பேரணிகளின் 'முதலாவது பொதுஜன பேரணி' நிகழ்வு நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பொதுமக்களைத் தவறாக வழிநடத்தி இந்த நாட்டைப் பாதாளத்துக்குள் தள்ளிவிட கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த சில குழுக்கள் மீண்டும் இணைந்து செயற்படுகின்றன.

அரசின் கொள்கைத் திட்டங்கள், எதிர்காலச் சந்ததியினரின் நலனை இலக்கு வைத்தே முன்னெடுக்கப்படுகின்றன. அதனால், எவ்வாறான தடைகள் ஏற்படினும் தொடர்ந்து முன்னோக்கி நகர்வோம்.

அரசுக்கு எதிராக வீதிக்கு இறங்கிப் போராட்டங்களை நடத்துபவர்கள், பொதுமக்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். அரச ஊழியர்கள், நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும் – என்றார்.

## இலங்கைக்குக் கடத்தப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சென்னையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தானியரின் ஏற்பாட்டில் இந்தியாவின் ஊடாக இலங்கைக்கு கடத்த முயன்றபோதே இவை கைப்பற்றப்பட்டன என இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை கடத்த முயன்ற சமயம் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட ஆறுபேரில் மூவர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுவதோடு இலங்கைச் சேர்ந்த மூவருமே முஸ்லிம்கள் எனவும் இந்தியத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கடத்தல் போதைப்பொருள் இந்திய மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டமையுடன், இதில் பாகிஸ்தான் நாட்டவர்களிற்கும் தொடர்பு இருப்பதனால் இந்தியாவில் அதி தீவிர விசாரணைக்கு இவ்விடயம் உட்படுத்தப்பட்டுள்ளது.

(முன்னர் வந்த செய்தி 7ஆம் பக்கத்தில்)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதற்கமைய நேற்று கிளிநொச்சி மாவட்டம், கிராஞ்சிப் பகுதியில் தரித்து வைக்கப்பட்டிருந்த 8 படகுகள் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளால் ஏலத்தில் விடப்பட்டன. இதன்போதே இந்த 8 படகுகளும் 94 ஆயிரத்து 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன.

இதேநேரம் இன்று மன்னார் மாவட்டத்தில் தரித்து வைக்கப்பட்டுள்ள 9 இந்தியப் படகுகள் ஏலத்தில் விடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஹட்டன் நஷனல் வங்கியினுடைய பணிப்பாளர் சபை தலைவர் திருமதி அருணி குணதிலக வடக்கு விஜயம்

ஹற்றன் நஷனல் வங்கியினுடைய பணிப்பாளர் சபை தலைவர் திருமதி அருணி குணதிலக தன்னுடைய வடக்குக்கான விஜயத்தை இன்று 10ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிவரை மேற்கொள்ள உள்ளார்.

அவர் வருகையின்போது வங்கி கிளைகளுக்கு விஜயம் செய்வதோடு வங்கியினுடைய சிறிய மற்றும் நடுத்தர வாடிக்கையாளர்களுடனும், பெண்கள் தலைமைத்துவமாகக் கொண்ட தொழில் முயற்சியாளர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள உள்ளதோடு மற்றும் கூட்டு சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள இருக்கிறார்.

அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

அருணி குணத்திலக்க ஹற்றன் நஷனல் வங்கியின் பணிப்பாளர் சபை தலைவராக ஏப்ரல் 2021 இல் நியமிக்கப்பட்டார். அவர் பிராந்திய நிதிச் சந்தைகள் தொடர்பாகப் பணியாற்றுவதிலே 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடைய ஒரு நிதித் துறைசார் நிபுணர் ஆவார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்து தனது இளம் சட்டமாணிப் பட்டத்தைப் பெற்ற அருணி குணத்திலக்க, அமெரிக்காவின் முன்னணிப் பல்கலைக் கழகமான ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டத் துறையிலே முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர்.

முகாமைத்துவத்தில் இருக்கும் பெண்கள் என்ற அமைப்பால் ( Women in Management)தொழில் புரியும் பெண்கள் என்ற அமைப்புடன் இணைந்து வழுங்கப்படும் முதல் ஐம்பது பெண் தொழில்வல்லுநர்களுக்கான விருதுகளிலே, ஹற்றன் நஷனல் வங்கியின் பணிப்பாளர் சபையின் தலைமைப் பதவியை வகிக்கும் அருணி குணத்திலக்க, இந்த ஆண்டுக்கான முதனிலை விருதைத் தட்டிச் சென்றார். இந்த விருது வழுங்கும் நிகழ்விலே இலங்கையிலும், மாலைதீவுகளிலும் தத்தம் துறைகளிலே சாதனை படைத்த பெண்களிலே மிக உயரிய சாதனைக்கான விருதினை இவர் பெற்றுக்கொண்டார்.






காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எங்கே நிற்கிறது இந்தியா?

இலங்கைத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விடயத்துக்கு நீதி, நேர்மையான தீர்வு ஒன்று கிட்டுவது தொடர்பில் இந்தியத் தரப்பின் பங்களிப்புக் குறித்து இப்போது மீண்டும் அதிகம் பேசப்படுகின்றது.

தமிழ்த் தேசிய தரப்பில், பிரதான கட்சிகள் பலவும் கன்னை பிரிந்து நின்று இவ்விடயத்தைக் கையாள்வதும் கண்கூடு. குறிப்பாக கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு புறமாகவும், மற்றைய பிரதான தமிழ்க் கட்சிகள், தரப்புகள் மறுபுறமாகவும் பிரிந்து நிற்கின்றன.

இந்தியாவையும், அதன் பங்களிப்பு அழுத்தத்தில் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தத்தையும் பற்றி நிற்கும் தமிழ்க் கட்சிகளை வெளியில் நிற்கும் தரப்புகள் 'இந்தியாவின் கைக் கூலிகள்' என்று நிந்திக்கும் அளவுக்கு பிரசாரங்கள் நடக்கின்றன.

தமிழரின் நலனில் எப்போதும் சிரத்தை காட்டி வரும் இந்தியாவின் பங்களிப்பு, ஆதரவு, ஒத்துழைப்பு இல்லாமல் தமது தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றைக் காணமுடியாது என்ற காரணம் கருதி, இத்தகைய 'கைக்கூலிகள்' குற்றச்சாட்டையும் எதிர்கொண்ட படி 'இந்தியாவே சரணம்' என்ற நிலையில் அந்தப் பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் செயற்படுகின்றன.

ஆனால் அக்கட்சிகளின் விசுவாசத்துக்கு நேர்மையாக – நியாயமாக – பாரதம் நடந்து கொள்கின்றதா என்பதுதான் பல தரப்புகளினதும் கேள்வியாகவும் சந்தேகமாகவும் எழுந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டுவது நமது கடமையாகின்றது.

தமிழர்களுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும், இலங்கையின் சுபீட்சமான எதிர்காலத்துக்கு அதுவே முக்கியம் என்ற உபதேசங்களை கடந்த பத்து வருடங்களாக மாறி மாறி ஓதி வரும் பாரதம், இவ்விடயத்தில் அதற்கு அப்பால் ஓரடி கூட மேலதிகமாக எடுத்து வைக்கவில்லை என்பது பிரதான தமிழ்க் கட்சிகளின் விசனமாக – குறையாக – உள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இருந்தும், கொழும்பு மற்றும் புதுடில்லியில் இருந்தும் இந்தியத் தரப்பு அவ்வப்போது விடுக்கும் அறிவிப்புகளில் எல்லாம் 'இந்தத் தத்துவம்' மட்டுமே எப்போதும் போதனை போல புதைந்திருப்பதை நாம் பத்து வருடங்களுக்கு மேல் கண்டு வருகிறோம். அது ஒரு மாறாத பிரதிபலிப்பு – வலியுறுத்தல் – மட்டுமே. இதற்கு மேல் தீர்வு முயற்சியில் ஓரடியைக் கூட இந்தியாவினால் முன்வைக்கச் செய்யவே முடியவில்லை என்பது தான் எல்லோரினதும் பட்டறிவு.

கொழும்பு ஆட்சிப் பீடம் மிக மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு கிடக்கின்றது. இறுதி நேரத்தில், சமய சந்தர்ப்பம் பார்த்து, இந்தியா இடையில் நுழைந்து, பெரும் கடனுதவிகளை வழங்கி, கொழும்பை ஆபத்பாந்தவன் போலக் காப்பாற்றியிருக்கின்றது. வரும் வாரங்கள், மாதங்களில் கூட இலங்கையின் பொருளாதாரம் மூச்சு விடுவதற்கு இந்திய முதலுதவிதான் அவசியம் என்பதும் வெளிப்படை.

ஆனால், இந்தச் சமயத்தில் கூட இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தில் கொழும்பை ஓரடி முன்நகர்த்தும் காரியத்தை புதுடில்லியால் சாதிக்க முடியவில்லையே என்பது சம்பந்தப்பட்டோரின் மனதில் பலத்த ஐயத்தை எழுப்புகின்றது.

சமய சந்தர்ப்பம் பார்த்து, உற்ற நண்பனாக புதுடில்லி தோள் கொடுத்தமையால் சுருண்டு விடாமல் பெருமூச்சுடன் இலங்கை நிமிர்ந்து நிற்கும் இந்த வேளையில் கூட, அதன் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லிக்குப் போய் பேச்சு நடத்தி விட்டு வெளியே வந்து, அங்கு நின்றபடியே 'இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வு விடயம் குறித்து இந்தியா எந்த அழுத்தமும் தரவேயில்லை' – எனப் பகிரங்கமாக அறிவிக்கின்றார்.

பதின்மூன்றாவது திருத்த நடைமுறையாக்கத்தைப் பற்றி எதுவும் பேசாமல், புதிய அரசமைப்பு உருவாக்கம் விரைவில் என்கின்றார்.

வழமை போல 'இலங்கையில் அதிகாரப் பகிர்வு முக்கியம்' என்ற மந்திரத்தை ஓதி விடயத்தை முடித்துக் கொள்கின்றார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்.

அப்படியானால் இலங்கைத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா எங்கே நிற்கின்றது?

இந்தியாவின் பக்கம் சார்பு எடுத்து நிற்கும் தமிழ்க் கட்சிகள் புரியாமல் – விளங்காமல் – தங்களுக்குள் தாங்களே கேட்டுக் கொள்ளும் கேள்வி இதுதான்!

# புலம்பெயர் நாட்டிலிருந்து அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் 240 ரூபா!

## நிமல் சிறிபால சில்வா கோரிக்கை



புலம்பெயர் தொழிலாளர்கள் இலங்கைக்கு அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் 240 ரூபாவை வழங்குமாறு திறைசேரியிடம் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால சில்வா கோரிக்கைவிடுத்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் கூறியவை வருமாறு;

வெளிநாட்டு தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்பும் டொலர்களுக்கு குறைந்தபட்சம் 240 ரூபா செலுத்துமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். மேலும், எனது அமைச்சால் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு 'பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்' ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதே போன்று வெளிநாடு செல்லும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு 15 ஆயிரம் அமெரிக்க டொலர் காப்பீடு வழங்குவதை கட்டாயமாக்கும் பணியும் நடந்து வருகிறது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# டொலர் பற்றாக்குறை நாட்டில் இல்லையாம்!

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



இலங்கையில் டொலர்களுக்கு பற்றாக்குறை இல்லை எனவும் இறக்குமதி மற்றும் ஏனைய தேவைகளுக்குப் போதுமான டொலர்கள் இருக்கின்றன எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மத்திய வங்கியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

டொலர்களுக்கு பற்றாக்குறை இருந்தால் கடந்த ஆண்டினுள் 22 பில்லியன் டொலர் மதிப்பிலான பொருள்களையும், கடந்த மாதம் 2 பில்லியன் டொலர் மதிப்பிலான பொருள்களையும் இலங்கைக்கு இறக்குமதி செய்தது எப்படி என்று அவர் கேள்வி எழுப்பினார்.

டொலர் இல்லாமையால் டொலர் பற்றாக்குறை ஏற்படவில்லை. டொலருக்கான கோரிக்கை அதிகரித்துள்ளமையே அதற்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் டொலரை பெற்றுக் கொள்வதற்காக மாற்று வழி மற்றும் முறை ஒன்றை கண்டுபிடிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

டொலருக்கான தேவை ஏற்பட்டுள்ளதென்பது ஒரு மோசமான விடயம் அல்ல. டொலர் நுகர்வைக் குறைப்பது தொடர்பாகச் சிந்திக்காமல் டொலரை சம்பாதிப்பதற்கான மாற்று வழிகளை உருவாக்கும் நடவடிக்கைளை மேற்கொள்வதே தற்போதைய அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச செஞ்சிலுவை சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் பிரதமருடன் சந்திப்பு!



சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனத்தின்பொதுச் செயலாளர் ஜகான் செபகன் உள்ளிட்ட தூதுக்குழுவினர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துள்ளனர்.

உலகின் மிகப்பெரிய மனிதாபிமான சேவையாற்றும் அமைப்பான சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனம் 192 நாடுகளில் காணப்படுகின்றன.

கொவிட் தொற்று உள்ளிட்ட வரலாற்றில் இலங்கை மக்கள் முகங்கொடுத்த ஒவ்வொரு பேரிடரின் போதும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கிய சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனத்துக்கு பிரதமர் இதன்போது தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் காணப்படும் உறுப்பு நாடுகளில் மிகவும் சுறுசுறுப்பாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்படும் முன்னணி சங்கமாக இலங்கை செஞ்சிலுவை சங்கம் விளங்குவதாக சுட்டிக்காட்டிய சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஜகான் செபகன், எதிர்கால நிவாரணப் பணிகளில் அவர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், இலங்கை மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜகத் அபேசிங்க முன்னெடுக்கும் பணிகளுக்கு அரசாங்கம் பூரண ஆதரவளிக்கும் என பிரதமர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க, சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனத்தின் இந்திய பிராந்திய தலைமை பிரதிநிதி உதய ரெஜிம், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் ஜகத் அபேசிங்க, பணிப்பாளர் நாயகம் வைத்தியர் மஹேஷ் குணசேகர, பிரதி பணிப்பாளர் நாயகம் அருண லேகம்கே ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# சுகாதாரத் தொழிற்சங்கங்களின் பணி பகிஷ்கரிப்புக்கு விரைவில் தீர்வு



தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தி நியாயமான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படுமென்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

உரிய தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள சில கோரிக்கைகளுக்குத் துரிதமாக தீர்வு வழங்க முடியும். இது தொடர்பாக இருதரப்பிற்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் சுகாதார அமைச்சில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற சந்திப்பின்போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் சில கோரிக்கைகள் பற்றி கவனம் செலுத்துவதற்காக இரண்டு வாரங்கள் தேவைப்படுகின்றன எனவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுகள் தோல்வியடைந்தமையால் வேலை நிறுத்தத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதாக சுகாதாரத் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. 7 கோரிக்கைகளை முன்வைத்து 18 தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

இதனால், நோயாளர்கள் பாரிய சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளார்கள். நாடளாவிய ரீதியில் 65 ஆயிரம் சுகாதாரத் துறை ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள், பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கு வாகனங்களை வழங்கியது ஜப்பான்

போதைப்பொருள் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கான ஒரு தொகை வாகனங்கள் மற்றும் உபகரணங்களை, ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியது.

ஜப்பான் அரசாங்கத்தால் வழங்கப்படும் இரண்டாம் கட்ட உதவியாகவே இந்த வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் வைத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) முற்பகல், ஜப்பான் தூதுவர் மிசூகொஷி ஹிடெயாக்கினால் , ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்க்ஷவிடம், இந்த வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

லேண்ட் குரூஸர் ரக வாகனங்கள் 28, ப்ராடோ வாகனமொன்று, போதைப்பொருள்கள் மற்றும் வெடிபொருள்களைக் கண்டறிவதற்கான ஸ்கேனர் இயந்திரத் தொகுதியொன்று உள்ளிட்ட பெறுமதிமிக்க உபகரணங்களே, இவ்வாறு கையளிக்கப்பட்டன. இவற்றின் பெறுமதி, 70 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பொலிஸார் மற்றும் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் சார்பில், பொலிஸ்மா அதிபர் சி.டீ.விக்ரமரத்னவும் அரச பகுப்பாய்வாளர் கௌரி ரமனா அம்மையாரும், இந்த வாகனங்கள் மற்றும் உபகரணங்களைப் பொறுப்பேற்றனர்.

அமைச்சர் சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு

கொழும்பு, பெப். 10

12 வயதிற்குஉட்பட்டகுழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆய்வு நடத்தி வருவதாக இலங்கையின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜேசூரிய, நிபுணர் குழுவின் சமர்ப்பிப்புகளுக்குப் பின்னர் இது தொடர்பாக எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது பரவியுள்ள கொரோனா வைரஸ் மற்றும் அது குழந்தைகளை எவ்வாறு பாதிக்கலாம் என்பதன் அடிப்படையில் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் பரிசீலிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை முழுவதும் தற்போது 12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருவதாக வைத்தியர் விஜேசூரிய தெரிவித்தார்.

# மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது சிக்கனமாகப் பயன்படுத்தக் கோரிக்கை!

**நாட்டில் நேற்று (புதன்கிழமை) முதல் மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இந்த விடயம் தொடர்பாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

**எனினும் தினமும் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையில் மக்கள் சிக்கனமாக மின்சாரத்தை பயன்படுத்துமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.**


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## UNIT OF SIDDHA MEDICINE
## Vacancies

University of Jaffna will entertain applications up to **28.02.2022** from suitably qualified persons for the post of **Temporary Assistant Lecturer / Temporary Demonstrator in Siddha Medicine.**

**Required Qualifications:**

1. A Degree with Specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;
   **OR**
2. A Degree with Specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
   **OR**
3. (a) A Degree with Specialization in the relevant subject without Honours or any other degree with at least second class Honours and (b) a recognized postgraduate degree in the relevant subject.

**Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the Temporary Demonstrator position.**

**SALARY AND OTHER BENEFITS**

| Posts | SALARY SCALE |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 49,860/ p.m. (fixed) |
| Temporary Demonstrator | Rs. 40,920/- p.m. (fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

**Closing date:**
Applications should reach us **on or before 28.02.2022.**

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna **Collection Account No:970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate applications** along with separate **Bank Slip.** The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service Certificates. Submission of Applications will not be entertained in person.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and applications received after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**Registrar**
University of Jaffna,
Sri Lanka
09.02.2022



## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons **with the first degree in Science based disciplines** for the post Senior Assistant Librarian Grade I / Senior Assistant Librarian Grade II/ Assistant Librarian in **Ariviyal Nagar Premises.**

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Assistant Librarian Grade I | Rs.91,310-7x2,170-106,500/-p.m |
| Senior Assistant Librarian Grade II | Rs.79,360-11x1,630-97,290/-p.m |
| Assistant Librarian | Rs.54,600-10 x1,335-67,950/-p.m |

In addition to the above salary, statutory benefits and the UGC approved allowances will be paid. (Refer University website for more details)

**Closing dates**
Application should reach us on or before **10.03.2022**

Applications for the above posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka with the certified photocopies of the educational & professional qualifications **(with statement of the Degrees and service certificates.)**

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna Collection Account No: **970000090000387** of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self – addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
09.02.2022

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியப் பிரதமருக்கு கடிதம் கொடுத்ததன் பின்னரே கடல் இறப்புகள் அதிகரித்துள்ளன

## இலங்கை அரசின் இராஜதந்திரம் இது என்கிறார் சார்ள்ஸ் எம்.பி.



இந்தியப் பிரதமருக்குத் தமிழ் கட்சிகளால் கடிதங்கள் கொடுத்ததன் பிற்பாடுதான் கடலில் இறப்புக்கள் நடைபெறுகின்றன. இது இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர நடவடிக்கையாகவே பார்க்கின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகத்துக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துக் கூறியவை வருமாறு -

இந்தியாவிடம் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது அதிகார பகிர்வு வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளால் கொடுக்கப்பட்ட கடிதங்களின் பின்னணியில் சம்பவங்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியா இருக்கிறது. இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள்தான் எங்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். ஆகவே, கடிதம் கொடுத்ததன் பிற்பாடு இந்திய மத்திய அரசாங்கம் இலங்கையில் ஓர் அழுத்தத்தை மேற்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை உருவாக்கியது இந்தியா.

இந்தியாவுக்குப் பொறுப்பு இருக்கிறது. எங்களுடைய தாய்நாடு இந்தியா, ஆகவே, இலங்கையில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட எல்லா பிரதிநிதிகளும் இணைந்து ஒரு விடயத்தை முன்வைக்கின்ற போது அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஒரு கடப்பாடு இந்தியாவுக்கு இருக்கிறது.

ஆனால் தற்போது தமிழ்நாட்டையும், இலங்கைத் தமிழர்களையும் முரண்படுகின்ற வகையில் இலங்கை அரசாங்கம் தந்திரோபாயத் திட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகிறது. அதாவது வடபகுதியில் இருக்கின்ற மீனவர்களுக்கும், இந்திய மீனவர்களுக்கும் இடையில் தற்போது ஒரு முரண்பட்ட நிலையை இலங்கை அரசாங்கம் உருவாக்கி இருக்கிறது.

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் பேச்சு நடத்தி எங்களுடைய மக்களை தங்களுடைய சொந்த நிலங்களில், சொந்தக் கடலில் மீன் பிடிப்பதற்கு ஏற்ற நிலைமையை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது.

ஆனால், தற்போது வடக்கு கடலில், இந்திய மீனவர்களும், இலங்கை மீனவர்களும் முரண்பட்டு மரணிக்கும் சம்பவங்கள் நடைபெறுகின்றன. அண்மையில் நான்கு உயிர்கள் பறிபோயிருக்கின்றன. இதில் சந்தேகம் இருக்கிறது. இந்தியப்பிரதமருக்குக்கடிதங்கள்கொடுத்ததன் பிற்பாடுதான் இந்த சம்பவங்கள் கடலில் நடைபெறுகின்றன.

ஆனால் கடலில் இந்திய மீனவர்களும், இலங்கை மீனவர்களும் சண்டை பிடித்தார்கள் என்பதற்கு எந்த விதமான ஓர் ஆதாரமும் இல்லை. ஆனால் அவர்கள் இறக்கிறார்கள். எப்படி இறக்கிறார்கள்? என்னைப் பொறுத்தவரையில், இது இலங்கை அரசாங்கத்தினுடைய ஒரு ராஜதந்திர நகர்வாகக் கடற்படையினுடைய செயற்பாடாக இருக்க வேண்டும்.

இலங்கை மீனவர்கள் சிறு படகில் இரண்டு பேர் செல்வார்கள். அவர்களைக் கொன்று கடலில் போட்டால் அவர்கள் தற்போது இருக்கின்ற நிலைமைக்கு என்ன நினைப்பார்கள்? இந்திய இழுவை படகில் வந்தவர்கள் தான் இவர்களைக் கொன்றிருக்கிறார்கள் என்றே எண்ணுவார்கள்.

அதே நேரத்தில் இந்திய மீனவர்களைச் சிறு படகில் சென்று தாக்கினால் இலங்கை மீனவர்கள் தமிழர்கள்தான் தாக்குகிறார்கள் என்ற ஒரு செய்தியையும் இராஜதந்திர ரீதியாக இலங்கை அரசாங்கம் கொண்டு வரும்.

இலங்கை கடற்படைதான் இந்த சம்பவங்களை பின்னணியிலிருந்து நடைமுறைப்படுத்திவிட்டு தமிழர்களுக்கு ஆதரவாய் இருக்கிற தமிழ்நாட்டையும், இந்தியாவையும் ஒரு முரண்பாட்டுக்குள் கொண்டு வந்தால் இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை மத்திய அரசாங்கத்துக்கு வழங்குகின்ற அழுத்தத்தைத் தவிர்க்க முடியும் என எண்ணியே இவை நடைபெறுகின்றன என மேலும் தெரிவித்துள்ளார்.



## இலங்கை அழகியிடம் இருந்து பறிபோன சர்வதேச அங்கீகாரம்

புஷ்பிகா டி சில்வாவிடமுள்ள திருமதி இலங்கை அழகி பட்டத்தை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் ரத்து செய்வதற்கு திருமதி இலங்கை அழகி ஏற்பாட்டு குழு பணிப்பாளர் சந்திமால் ஜயசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமதி உலக அழகி போட்டிக்காக, இலங்கை திருமதி அழகியைத் தெரிவுசெய்வதற்காக தமது அமைப்பு கொண்டுள்ள சட்டரீதியான அதிகாரத்துக்கமைய, உடன் அமுலுக்கு வரும் வகையில் புஷ்பிகா டி சில்வாவின் திருமதி இலங்கை அழகி பட்டத்தை, உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் எந்தவிதத்திலும் பயன்படுத்தத் தடை விதிப்பதாகத் தெரிவித்தார்.

புஷ்பிகா டி சில்வா கடந்த 2021 ஏப்ரல் 4 ஆம் திகதி திருமதி இலங்கை அழகியாக மகுடம் சூடியமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு – தமிழக மீனவர்களை மோத வைக்க நடவடிக்கை சபையில் சாள்ஸின் கருத்தால் டக்ளஸ் கடும் ஆக்ரோஷம்!



வடக்கு மற்றும் தமிழக மீனவர்களை மோத வைப்பதற்கான இராஜதந்திர நகர்வுகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்டுகின்றனவா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையில் கேள்வி எழுப்பியுள்ளது.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றுவரும் நாடாளுமன்ற அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இந்தக் கேள்வியைகடற்தொழில்அமைச்சரிடம் வினவினார்.

இந்திய இழுவைப்படகுப் பிரச்சினைக்கு இரு மாதங்களுக்குள் தீர்வு கிடைக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்றில் கூறியிருந்தார்.

அவரது இந்தக் கருத்தை சுட்டிக்காட்டிய சார்ள்ஸ் நிர்மலநாதன், கடலுக்கு செல்பவர்கள் மரணிக்கும் சம்பவங்கள் தற்போதும் இடம்பெறுகின்றன என ஆதங்கம் வெளியிட்டார்.

அத்தோடு இதனை கண்டுகொள்ளாமல் பிரச்சினைக்கு தீர்வைக் காணாமல் இருப்பது இருதரப்பையும் மோதவைக்கும் இராஜதந்திர முயற்சியா என்றும் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜதந்திர நடவடிக்கை என்ற கருத்து அரசியல் உள்நோக்கத்தோடு எழுப்பப்பட் டது என சாடினார்.

கடந்த 5 வருட ஆட்சியில் எதுவும் செய்யவில்லை என குற்றம் சாட்டிய அமைச்சர், விரைவில் மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்றும் உறுதியளித்தார்.

## சிவாஜிலிங்கம் மற்றும் ரவிகரன் உள்ளிட்ட நால்வர் மீதான வழக்கு விசாரணை ஜீலை!



கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில், மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியை சுவீகரிக்க சென்ற பொழுது நில அள வீட்டாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களை கடமை செய்யவிடாமல் தடுத்து வாகனம் சேதப்படுத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழங்கு விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத் தீவு மாவட்ட நீதிவான் நீதி மன் றில் நீதிபதி ரி. சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

கோட்டாபய கடற்படை முகாமுக்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டமைக்காக, வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக இந்த வழங்கு தொடரப்பட்டுள்ளது.

இதன்போது குற்றசாட்டிற்கு உள்ளானவர்கள் சார்பாக மன்றில் பிரசன்னமாகியிருந்த அனைத்து சட்டத்தரணிகளும் ஆஜராகி இருந்தார்கள்.

சட்டத்தரணிகள் நீதிவானிடம் விண்ணப்பித்தமைக்கு அமைவாக தொடர்ச்சியாக வழங்கு தாக்கல் செய்யப்படாமல் சட்டமா அதிபரிடம் இருந்து எதிர்பாக்கப்படுகின்றது எனச் சொல்லப்படுவதை அடுத்து அழைப் பாணை அனுப்பப்பட்டால் மாத்திரம் நீதிமன்றத்துக்கு வருகை தரவேண்டும் என்று நீதிபதியால் சொல்லப்பட்டுள்ளதுடன் இந்த வழக்கு எதிர் வரும் ஜீலை மாதம் 26 ஆம் திகதியிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவனவாக அரசியல் செயற்பாடுகள் இருக்க வேண்டும்

## எஸ்.வியாழேந்திரன் திட்டவட்டம்





தமிழ் மக்கள் மத்தியில் உரிமையைப் பெற்றுத்தருவோம் ஈழத்தைப் பெற்றுத் தருவோம் என்று பேசி அந்த மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றதன் பின்னர் அவர்களால் அந்த மக்களுக்கு குடி தண்ணீரைக் கூட பெற்றுக்கொடுக்க முடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடா பகுதி மக்களுக்கான குடி தண்ணீர் விநியோக திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இந்த ஆண்டு நிறைவடைவதற்குள் மட்டக்களப்பு மாவட்டத்தின் 90 வீதமான குடி தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படும் பிரச்சினைகளைப்பற்றி எல்லோரும் பேசமுடியும். ஆனால் அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வைப்பெற்றுக்கொடுப்பது என்பது இலகுவான விடயம் அல்ல.

பிரச்சினைகளை எல்லோரும் பேச முடியும். மக்கள் பிரச்சினைகளை பேச வேண்டும், மக்கள் பிரதிநிதிகள் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

ஆனால் மக்கள் பிரதிநிதிகளும் தற்போது பிரச்சினைகளையே பேசுகின்றனர். மக்களும் அழுகின்றார்கள், அவர்களுடன் இணைந்து மக்கள் பிரதிநிதிகளும் அழுகின்றனர். அவ்வாறானால் அந்த மக்களின் பிரச்சினையை யார் தீர்த்துவைப்பது.

நாங்கள் மக்களின் தலைவர்கள், மக்களின் பிரதிநிதிகள். எங்களைத் தெரிவு செய்தால் உரிமையைப் பெற்றுத்தருவோம், ஈழத்தைப் பெற்றுத்தருவோம் அதைப்பெற்றுத் தருவோம் என்றெல்லாம் பேசி அந்த வாக்குகளில் வெற்றிபெற்றதன் பின்னர் குடி தண்ணீரைக் கூட பெற்றுக்கொடுக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

மக்களின் அன்றாடப் பிரச்சினையைக் கூட தீர்க்க முடியாத நிலையே உள்ளது. ஒரு சமூகத்தின் வளர்ச்சியைப்பற்றி சிந்திப்பதாக இருந்தால் தமிழர்களின் அரசியல் மாற்றப்பட வேண்டும்.தமிழர்களின் அரசியலில் உள்ள சாபக்கேடும் இதுவாகவேயிருக்கின்றது.

தமிழ் சமூகம் மற்றைய சமூகத்திற்கு இணையாக வளர்த்தெடுக்கப்பட வேண்டுமானால்,அனைத்துத் துறைகளிலும் வளர்க்கப்பட வேண்டுமானால் தமிழர்களின் அரசியல் அடிப்படையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாக அந்த அரசியல் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## முன்னணி பல்கலைக்கழகமாக கொழும்பு பல்கலை தரவரிசை!

சர்வதேச வெப்மெட்ரிக்ஸ் தரவரிசையின் படி கொழும்பு பல்கலைக்கழகம் இலங்கையின் முன்னணி பல்கலைக் கழகமாக பெயரிடப்பட்டுள்ளது. சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 சிமாகோ (எகிப்து) கூட்டுத்தாபன தரவரிசை சுட்டெண்ணின் படி கொழும்பு பல்கலைக்கழகம் இலங்கையின் முதல் பல்கலைக்கழகமாக தரப்படுத்தப்பட்டு, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பிற பல்கலைக்கழகத் தரவரிசைகளின் பட்டியலில் கொழும்பு பல்கலைக்கழகமும் முதலிடம் பிடித்துள்ளது.

இலங்கையின் உயர்கல்வித் துறையில் ஒரு மையமான கொழும்புப் பல்கலைக்கழகம், ஒன்பது பீடங்கள், ஏழு நிறுவனங்கள், ஏழு மையங்கள், ஒரு வளாகம் மற்றும் கணினி அறிவியல் நிறுவனம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகம் 37 ஆயிரத்து 636 இளங்கலை, முதுகலை, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் படிப்புகளை வழங்குகிறது. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வெப்மெட்ரிக்ஸ் குறியீட்டின் உச்சத்தை எட்டுவது பல்கலைக்கழகத்தின் தரமான ஆராய்ச்சி, கற்பித்தல் செயல்முறையின் சிறப்பம்சம், சர்வதேச அங்கீகாரம், சமூகம், பொருளாதார மற்றும் தொழில் துறைகளுடனான உறவுகளை எடுத்துக்காட்டுகிறது என்று கொழும்பு பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

## ஊழியர் சேமலாப நிதியத்தை அரசு பயன்படுத்த முடியாது

### சுனில் ஹந்துன்னெத்தி சுட்டிக்காட்டு



ஊழியர் சேமலாப நிதியத்தை அரசாங்கம் தனக்கு விரும்பியவாறு பயன்படுத்த முடியாது என ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் னெத்தி தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் மத்திய வங்கியும் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதியத்தை பாதுகாக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் இந்த புதிய வரியை அறிமுகம் செய்ததன் நோக்கம் மோசடிகளில் ஈடுபடவேயாகும் என அவர் குற்றம் சுமத்தியுள் ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஒரு லட்சம் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளார் எனவும், அந்தத் திட்டங்களை முன்னெடுக்கவும் ஊழல் மோசடிகளில் ஈடுபடவும் இந்த வரியை பயன்படுத்துவார் எனவும் சுனில் ஹந்துனெத்தி குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தப் பணத்தைக் கொண்டு கிராமத்தில் பாலமொன்றை செய்து, தேர்தலுக்கு அரசாங்கம் ஆயத்தமாகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## பொது மக்களுக்கு பால்மா போதை அமைச்சர் திலும் திடுக்கிடும் தகவல்!



நாட்டில் பால்மாவை பயன்படுத்துவது ஒரு போதையாக மாறிவிட்டது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பால்மாவில் காணப்படும் தீங்கு விளைவிக்கும் பொருள்கள் தொடர்பில் பொது மக்களுக்குத் தெரியுமா என்றும் இதன்போது இராஜாங்க அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு–

பால்மாவிலுள்ள தீங்கு விளைவிக்கும் பொருள்கள் தொடர்பாகப் பொதுமக்கள் அறிந்தால் பால்மா பொதிகளைக் கொள்வனவு செய்வதற்கான வரிசைகள் குறையும்.

பொதுமக்களுக்குத் திரவப் பாலில் பல தெரிவுகள் உள்ளன. சவால்கள் மற்றும் பிரச்சினைகள் எவையாக இருந்தாலும், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதில் ஜனாதிபதி தொடர்ந்து கவனம் செலுத்துவார்.

இவ்வாறான தீர்மானங்களை மக்கள் விரும்ப மாட்டார்கள்.தற்காலிகமாக அவை பிரபலமடையாது. இவ்வாறான தீர்மானங்களின் பின்னணியில் உள்ள காரணங்களை எதிர்காலத்தில் பொதுமக்கள் புரிந்து கொள்வார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

பல மாற்று வழிகள் இருக்கும் போது, பால்மா தட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் மீது குற்றம் சுமத்தி மக்கள் வரிசையில் நிறகின்றமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் கவனம் செலுத்துகின்றனர் எனவும் இராஜாங்க அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த பெருந்தொகை போதைப்பொருள்!

## இலங்கையர்கள் உள்ளிட்ட பலர் கைது

ஆந்திராவில் இருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட, பல கோடி ரூபா மதிப்புள்ள, 11 கிலோ 'ஆம்பெட்டமைன்' போதைப் பொருளை, மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

தமிழக ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் இலங்கையர்கள் மூவர் உள்ளிட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை அடுத்த கும்மிடிப்பூண்டி அருகே, தேசிய நெடுஞ்சாலையில் சந்தேகத்திற்கிடமான முறையில் சென்ற வாகனத்தை சோதனை செய்த போது இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அவற்றை பறிமுதல் செய்து, வாகன ஓட்டுநர், உரிமையாளர், இடைத்தரகர் என மூவரை பொலிஸார் கைது செய்தனர். போதைப் பொருள் கடத்தலுக்கு மூளையாக செயற்பட்ட, இலங்கையர்கள் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில், கடல் வழியாக இலங்கைக்கு போதைப் பொருளை கடத்த இருந்தமை தெரிய வந்துள்ளது.

போதைப் பொருள் கடத்தல் பின்னணியில் உள்ள, கும்பல் தொடர்பாக மேலும் தகவல்கள் பெற வேண்டி இருப்பதால், கைது செய்யப்பட்டவர்களின் பெயர் உள்ளிட்ட விவரங்களை வெளியிடவில்லை. இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த்தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தல்!

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி ஓராண்டு பூர்த்தி அறிக்கை

மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த்தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு தவத்திரு வேலன் சுவாமிகள் (ஒருங்கிணைப்பாளர்), எஸ். சிவயோகநாதன் (ஒருங்கிணைப்பாளர்), வண. பிதா கந்தையா ஜெகதாஸ் (ஒருங்கிணைப்பாளர்) ஆகியோரால் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான எழுச்சி போராட்டத்தின் ஒரு வருட பூர்த்தி நேற்றாகும். ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னர் தமிழர் தாயகம் எங்கும் கொந்தளித்த மாபெரும் எழுச்சிப் போராட்டமாக சமகால வரலாற்றில் இது இடம்பிடித்திருந்தது.

பல்வேறு அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் தமிழினமே தன்னெழுச்சியாகப் பொங்கியெழுந்து தமது நியாயமான கோரிக்கைகளான மரபுவழித்தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த்தேசியம் என்பவற்றையும் தமக்கான சர்வதேச நீதியையும் வலியுறுத்தி நின்ற நாள். நீதிமன்றத் தடை உத்தரவுகள், அச்சுறுத்தல்கள், கல்வீச்சுகள் என பல்வேறு தடைகளையும் தாண்டி, அரசியல் பாகுபாடுகளைப் புறந்தள்ளி தமிழினமே ஒருமித்து எழுந்து நின்ற தருணம். தமிழினத்தின் சுயநிர்ணய உரிமை என்பதையே அடிநாதமாக கொண்டு இந்தப் போராட்டம் கட்டமைக்கப்பட்டது.

இதன்வழி தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் கூறுகளின் தாக்கங்களையும், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளையும் உள்ளடக்கியதான பின்வரும் கோரிக்கைகளை இந்தப் போராட்டம் வலியுறுத்தி நின்றது.

1) யுத்தம் நிறைவடைந்து கடந்த பதினொரு ஆண்டுகளில் வடக்கு - கிழக்கை இராணுவ மயமாக்கிவரும் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் கலாசார, பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதுடன் வடக்கு கிழக்கு பூர்வீகக் குடிகளான தமிழர்களின் இனப்பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி, தமிழ்த் தேசியத்தைச் சிதைவடையச் செய்து, அவர்களது இருப்பை இல்லாமல் செய்வதற்காக பல வகையிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், நிலவள திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பௌத்த மயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை இலங்கை அரசாங்கம் முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகிறது.



வடக்கு கிழக்கில் உள்ள சுமார் 200 இற்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த தமிழ் ஆலயங்களை கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டும், தொடர்ந்தும் அமைக்கப்படுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான நில அபகரிப்புகளும், பௌத்த சிங்கள மயமாக்கல்களும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

2) தமிழர் தாயகம் எங்கும் நிலைகொண்டிருக்கும் சிங்கள இராணுவம் உடனடியாக அகற்றப்படுவதுடன், இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். சிவில் நிர்வாகங்களில் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படுத்தல் உடனடியாக நிறுத்தப்படுவதுடன் தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

3) மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதும், அதற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இது அவர்களின் பேச்சுரிமை, நடமாடும் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். அத்துடன் தமிழர் தரப்பில் உருவாகும்விடுதலைக்கானதன்னெழுச்சியான அரசியல் வெளியை ஒடுக்குவதில் சிங்கள பௌத்த பேரினவாத அரசு குறியாகவே உள்ளது. இவ்வாறான அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

4) தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்தும், பூர்வீக வாழ்விடங்களை அபகரித்து சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்து மேற்கொண்டும் வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல் தரைக் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றம் ஒன்றை உருவாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மட்டக்களப்பில் உள்ள தமிழ்ப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்குடன் பால் தரும் பசுக்களைத் திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யும் நடவடிக்கைகளும் நடந்தேறி வருகின்றன. இதன் ஒரு கட்டமாக தமிழ்ப் பூர்வீக நிலங்களில் வனங்கள் அழிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான தமிழரின் வாழ்வாதாரங்களை அழிக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

5) தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகள் உடனடியாக மீளக் கையளிக்கப்பட வேண்டும்.

6) தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையைத்தொடர்ச்சியாகமறுதலித்து வரும் இந்த சிங்கள பௌத்த அரசு, தமிழர்களின் நினைவுத்தூபிகள், அடையாளங்களை அழிப்பதில் முனைப்பாகச் செயல்படுகின்றது. இந்த நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

7) பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் பலரையும் கைது செய்து பல வருடங்களாகத் தடுத்து வைத்துள்ளனர். இஸ்லாமியச் சகோதரர்களையும் இதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தற்போது தடுத்து வைக்கத் தொடங்கியுள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுவதுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் யுத்த மற்றும் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

8) பல வருடங்களாகத் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டும்.

9) இஸ்லாமிய மக்களின் மத ரீதியான பாரம்பரிய சமய சடங்கான ஜனாசாக்களைப் புதைக்கும் செயற்பாடுகளை இல்லாமல் செய்து ஜனாசாக்களை இந்தச் சிங்கள பௌத்த பேரினவாத அரசு எரியூட்டி வருகின்றது. இதற்கு எதிராகப் போராடும் முஸ்லிம் சமூகத்தையும் அடக்கி ஆள முனைகின்றனர். இந் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட்டு இஸ்லாமிய மக்களின் அடிப்படை மத உரிமை மதிக்கப்பட வேண்டும்.

10) அத்துடன் மலையகத் தமிழ் மக்கள் தங்களது நாளாந்த வாழ்வாதாரத்துக்காக ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கேட்டுப் போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படுவதுடன் அவர்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

இதில் இஸ்லாமிய மக்களின் ஜனாசா எரிப்பு விடயம் தவிர்த்து வேறு எவ்வித கோரிக்கைகளும் ஒரு வருடம் கடந்த பின்பும் நிறைவேற்றப்படவில்லை. சிங்கள பேரினவாத அரசு இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றும் என நாம் ஒரு போதும் நம்பவில்லை.

ஆயினும் சர்வதே சமுதாயத்திற்கு எமதினத்தின் தற்போதைய நிலைப்பாட்டையும் எவ்வாறான அடக்குமுறையின் கீழ் உள்ளோம் என்பதனையும் வெளிக்கொண்டு வரவுமே இதனை முன்வைத்தோம்.

எமது தாயக பூமியை சிங்கள பேரினவாதம் தொடர்ச்சியாகவே நேரடியாகவும் மறைமுகமாகவும் விழுங்கிவருகிறது.

எங்களது பாரம்பரிய வழிபாட்டிடங்களில் புத்தவிகாரைகள் முளைக்கின்றன. தமிழர் தேசமெங்கும் சிங்கள குடியேற்றங்கள் முளைக்கின்றன. இதனூடாக எமது இனப்பரம்பல் மாற்றியமைக்கப்படுகின்றது. இதனூடாக நாம் ஒரு தேசிய இனம் என்பதை இல்லாது செய்வதற்கு சிங்களப்பேரினவாதம் தொடர் முயற்சியில் இறங்கியுள்ளது. இதனை முறியடித்து எமது இனத்தையும் நிலத்தையும் எமது பாரம்பரியத்தையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழருக்கும் உண்டு.

இதற்காக நாம் அனைவரும் கட்சி அரசியலை கடந்து தமிழராக ஒன்றுபட வேண்டும். எங்கள் இளைய சந்ததியினர் எமது இனத்தின் தற்போதைய நிலையை உணர்ந்து தமிழினத்தின் தேசிய போராட்டத்தைக் கையேற்க வேண்டும்.

நாம் ஒரு தேசமாக எழுந்து நிற்கும் போதே எமது விடுதலை சாத்தியமாகும். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சியின் பிறப்பாக உருவெடுத்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் கடந்த ஒரு வருடமாக மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் உறுதியெடுக்கப்பட்ட பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பிரகடனமான தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த்தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும்'.

அத்துடன் தமிழ் இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற இனவழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம்.

தற்போதைய காலகட்டத்தில் தேர்தல் அரசியலைக் கடந்த தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் மக்கள் இயக்கம் ஒன்றின் தேவை தமிழ்த் தேசிய பரப்பில் உணரப்பட்டுள்ளது.

படிமுறை வளர்ச்சி கண்டுவரும் எமது இயக்கத்தை மேலும் வலுப்படுத்தவும், எமது தேசிய போராட்டத்துக்கு மேலும் வலுச்சேர்க்கவும் தமிழ் மக்களின் அனைத்துத்தரப்பினரும், குறிப்பாக இளையோர்கள் மற்றும் மாணவர்கள் எம்மோடு கரம் கோர்க்குமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலையில் கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி, பெப். 10

கிளிநொச்சி மாவட்டத்தில் கொவிட் பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது.

மாவட்டத்தில் தற்போது 800 அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதற்கே அண்டிஜன் பரிசோதனை கருவிகள் இருக்கின்றன எனவும் இதனால் கடுமையான நோய் அறிகுறிகளுடன் வருகின்றவர்களைத் தவிர சாதாரண நோய் அறிகுறிகளுடன் வருகின்றவர்களை பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பரிசோதனை எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி 800 பரிசோதனைக் கருவிகள் ஒரு சில நாள்களில் முடிவடைந்து விடும் என்றும் அதற்குப் பின்னர் கொழும்பிலிருந்து பரிசோதனை கருவிகள் கிடைக்கப்பெறுகின்ற போதே தொடர்ந்தும் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மீண்டும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

### தங்கத்தின் விலை குறைய வாய்ப்பில்லை!

தங்கத்தின் விலை இப்போதைக்கு குறைவதற்கான வாய்ப்பில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்இலங்கை தங்கநகை வியாபாரிகள் சங்கத்தின் பொருளாளர் பாலசுப்ரமணியம் தெரிவித்தவை வருமாறு–

சர்வதேச சந்தையில் கடந்த தினங்களில் தங்கத்தின் விலை குறைவடைந்திருந்தாலும், தற்போது மீண்டும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

அதேநேரம் இலங்கையின் நாணயப்பெறுமதி டொலருக்கு நிகராக குறைந்த நிலையில் இருக்கிறது.

இவ்வாறான சூழ்நிலையில் உள்நாட்டில் தங்கத்தின் விலை குறைவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகருடன் சிறீதரன், சாள்ஸ் எம்.பிகள் சந்திப்பு




இலங்கைக்கான இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் விநோத் ஜேக்கப்புக்கும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கடந்த சனிக்கிழமை கொழும்பு – 3 இலுள்ள இந்திய பிரதி உயர்ஸ்தானிகரின் வதிவிடத்தில் இடம்பெற்றது.


இந்தச் சந்திப்பின் போது, தமது வாழ்வாதாரம் சிதைக்கப்படுவதற்கும், மாதகல் மற்றும், வத்திராயன் பகுதியில் சடலங்களாக கரையொதுங்கிய கடற்றொழிலாளர்களின் இறப்புக்கு நீதிகோரியும் வடமராட்சி, சுப்பர்மடம் பகுதியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைக்கு கூர்நோக்குடனான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு கடற்றொழிலாளர்களிடையே தொடர்ச்சியாக நிலவிவரும் இந்த முரண்பாடுகள் ஈழத்தமிழர்களுக்கும், தாய்த்தமிழக உறவுகளுக்குமிடையே விரிசலை ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் முகமாக, இலங்கை கடற்றொழிலாளர்களின் கடல் எல்லைகளை வரையறை செய்வதற்கேனும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோள் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பாகவும், தமிழ்மக்களின் ஏகோபித்த அரசியல் அபிலாயையான நிலையான அரசியற்தீர்வைப் பெறுவதில் ஏற்படுத்தப்படும் காலதாமதம், தமிழர்களின் நில உரித்துக்களை வன்பறிப்புச் செய்து, தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தும் சமநேரத்தில் இந்தியாவின் அரசியல், இராஜதந்திர நகர்வுகளிலும் தாக்கம் செலுத்தக்கூடும் என்பதால், தமிழர்களுக்கான நிரந்தர அரசியல்தீர்வில் இந்தியாவின் வகிபாகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் சிறப்பாகக் கலந்துரையாடப்பட்டது.

# திருகோணமலைப் பகுதியில் வெடித்தது எரிவாயு அடுப்பு





திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துளசிபுரம் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்ததில் வீடு சேதமடைந்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வெடிப்பு சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துளசிபுரம் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிலே புதிய எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளதாகவும், வீட்டின் மேல்பகுதி (சிவிலிங்) போன்றன சேதமடைந்துள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வலம்புரிச் சங்கு இரண்டை வைத்திருந்தவருக்கு மறியல்

திருகோணமலை – மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெய்தல் நகர் பகுதியில் சட்ட விரோதமான முறையில் வலம்புரிச் சங்கு இரண்டை வைத்திருந்த நபர் ஒருவரை இம்மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதிவான் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

தாரீக் வீதி, நெய்தல் நகர் மூதூர் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இரண்டு வலம்புரிச் சங்குகளை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த நிலையிலே மூதூர் – கட்டைபறிச்சான் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து இராணுவப் புலனாய்வாளர்கள் வலன்புரிச் சங்குகளுடன் சந்தேக நபரைக் கைது செய்து மூதூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரை பொலிஸார் மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்க மறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

### மூன்றரை வயது சிறுவன் கிணற்றில் வீழ்ந்து சாவு!

மூன்றரை வயது சிறுவன் ஒருவன் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளான். மாவனல்லை வேகந்தலை பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மாவனல்லை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது என மாவனெல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கிழக்கு மாகாண கடற்பரப்புக்களில் வெளிநாட்டுக் கழிவுகள் ஒதுக்கம்





கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்புமாவட்டத்தின் தேத்தாதீவு, களுதாவளை, களுவாஞ்சிகுடி, ஓந்தாச்சிமடம் உள்ளிட்ட கடற்கரை ஓரங்களில் பல வெளிநாடுகளின் பெயர் பொறிக்கப்பட்ட கழிவுகள் கரை ஒதுங்குகின்றன என பொதுமக்களும், மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

காலணிகள், வெற்றுப் போத்தல்கள், குளிர்பான போத்தல்கள், மூங்கில்கள் உள்ளிட்ட பல பொருள்கள் கடலலையில் அள்ளுண்டு கரையொதுங்குகின்றன எனவும், இதனால் சூழலுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும், கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தக் கழிவுகள் பெரும் தடையாகக் காணப்படுகின்றன எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கரையொதுங்கும் சில வெற்றுப்போத்தர்களில் மியன்மார் என ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

# வெள்ளவத்தையில் இளைஞர் சடலம் மாலைதீவு பொலிஸார் விசாரணைக்கு!



கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை காணாமல்போன இளைஞன் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளுக்காக மாலைதீவு பொலிஸார் இலங்கை வந்துள்ளனர்.

வெள்ளவத்தை கடற்கரையில் மீட்கப்பட்ட இரண்டு சடலங்களில் ஒரு சடலம் காணாமல் போன மாலைதீவைச் சேர்ந்தவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்துள்ள பொலிஸார், மாலைதீவு பொலிஸாரும் இது தொடர்பில் விசாரணைகளில் தீவிரம் காட்டுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளனர். சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அடங்கிய மாலைதீவு குழுவொன்று இலங்கை புறப்பட்டுள்ளது.

இரண்டு உடல்களும் வெள்ளவத்தை கடற்கரை பகுதியில் மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று அவ்ஹாம் நசீர் உடையது என உறுதிப்படுத்தியுள்ள அதிகாரிகள் விசாரணைகள் தொடர்பாகத் தங்களிற்கு எந்த விவரமும் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளனர். மீட்கப்பட்ட சடலங்களில் காயங்கள் காணப்படுகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் மாலைதீவைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளமை தொடர்பாகத் தங்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள மாலைதீவு பொலிஸார் இந்த விவகாரம் தொடர்பான அமைப்புகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் தீர்வு விடயம் தொடர்பில் அழுத்தம் வழங்கவில்லை டில்லி

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கூறுகின்றார்



இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பாக இந்தியா எந்த அழுத்தங்களையும் கொடுக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களது பிரச்சினைகள் என்பது, உள்ளார்ந்த குறைபாடுகளால் எழுந்தவை. அவை அவதானத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்தப் பிரச்சினைகளின் ஆரம்பப் புள்ளிகள் தொடர்பாக இன்னும் அவதானம் செலுத்தப்படவில்லை. எனினும், இவை தீர்க்க முடியாத பிரச்சினைகள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்புத்துறை முகத்தின் மேற்கு முனைய அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 2 அல்லது 3 மாதங் களில் ஆரம்பிக்கப்படும் என்றும், இந்தியாவில் இருந்து இலங்கை மின்சாரத்தைப் பெறக்கூடியதாக இருந்தால் பாரிய நன்மைகள் கிடைக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# கொரோனாத் தொற்றால் ஒரே நாளில் 36 பேர் பலி!

கொழும்பு, பெப்.10

இலங்கையில் மேலும் 36 கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல்திணைக்களம்நேற்றுவிடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணமடைந்த 36 பேரில் 27 பேர் ஆண்களும், 9 பேர் பெண்களும் அடங்குகின்றனர். இதில் 60 வயதுக்கு மேற்பட்டோர் 25 பேர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய நாட்டில் இதுவரை பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 692 ஆக அதிகரித்துள்ளது.

# மார்ச்சில் இலங்கை வருகின்றார் மோடி!

இலங்கை - இந்திய உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் அடுத்தடுத்து பலவிஜயங்கள்இடம்பெற்றுவருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சை மேற்கொள்காட்டி தென்னிலங்கை ஊடகம் ஒன்று, இது குறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி இலங்கைக்கு வர வாய்ப்புள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் புதுடில்லிக்கான தனித்தனியான விஜயங்களை முடித்துக் கொண்டுள்ளனர்.



இந்தநிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய வாய்ப்புள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சுவட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

# யாழ்ப்பாணப் பல்கலை மாணவன் மீதுதாக்குதல்!

அரைக் காற்சட்டையுடன் யாழ்.பல்கலைக்கழகத்துக்குள் வந்த மாணவனைக் கண்டித்த சிரேஷ்ட மாணவன் யாழ்.பல்கலைக்கு வெளியில் வைத்து தாக்கப்பட்டமை தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கடந்தவாரம்யாழ்.பல்கலைக்கழகத்தினுள் கனிஷ்ட மாணவன் ஒருவர், பல்கலைக்கழக மாணவன் அல்லாத தன்னுடைய நண்பர் ஒருவருடன் அரைக் காற்சட்டை அணிந்து பல்கலைக்கழக வளாகத்தினுள் வந்துள்ளார்.

அதனை அவதானித்த மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்கள் குறித்த மாணவனை அழைத்து அரைக் காற்சட்டையுடன் பல்கலை வளாகத்தினுள் நுழைந்தமையைக் கண்டித்து, பல்கலை வளாகத்தை விட்டு வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

அதன்போது , மாணவனுடன் வந்த பல்கலைக்கழகம் சாராதவர், சிரேஷ்ட மாணவர்களுடன் முரண்பட்டுள்ளார். அதையடுத்து அங்கு வந்திருந்த பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், அரைக்காற்சட்டையுடன் பல்கலைக்கழக வளாகத்தினுள் நின்றவர்களை வெளியேற்றி இருந்தனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற பின்னர், அரைக் காற்சட்டையுடன் வந்த நபர்களைக் கண்டித்த சிரேஷ்ட மாணவர் ஒருவர் கல்லுண்டாய் வெளி ஊடாக தனது நண்பர் ஒருவரின் ஓட்டோவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை, ஓட்டோவைக் கல்லுண்டாய் வெளியில் வழிமறித்த கும்பல் ஒன்று மாணவன் மீது சரமாரியாகத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக ஒழுக்காற்று குழுவுக்குத் தாக்குதலுக்கு இலக்கான மாணவன் முறையிட்டதை அடுத்து, பல்கலைக்கழகத்துக்கு வெளியே நடைபெற்ற சம்பவம் என்பதால், அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாக மாணவனால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## புலிகளுக்கு முடிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைரஸ் தொற்றிலிருந்து மக்களைக் காத்தவர்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

- இவ்வாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுப் பேரணிகளின் 'முதலாவது பொதுஜன பேரணி' நிகழ்வு நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரஜரட்ட (அநுராதபுரம்) என்பது எமக்கு என்றும் கை கொடுக்கும் மண். 2015இல் எமக்குத் தோல்வி ஏற்பட்டபோதுகூட ரஜரட்டவில் வெற்றி பெற்றோம். இங்குள்ள மக்கள் போலிகளுக்கு ஏமாறவில்லை.

பிரபாகரனைத் தோற்கடிக்க முடியாது, புலிகள் அமைப்பு பலம் மிக்கது என அன்று தெரிவித்தனர். ஆனால், அந்த அமைப்புக்கு மூன்றரை வருடங்களில் முடிவுகட்டிய தலைவர்தான் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

நாடு நெருக்கடியான நிலையில் இருக்கும்போதுதான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுப்பேற்றார். அதன்பின்னர் கொரோனா வைரஸ் தொற்று பரவியது. எமது ஜனாதிபதி துவண்டுவிடவில்லை. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தீவிரம் காட்டினார். நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாத்தார். எனவே, இவ்விரு தலைவர்களும் உலக வரலாற்றில் இடம்பிடிப்பார்கள் - என்றார்.

## மீனவர்களின் பிரச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புவேளை பிரேரணையை நேற்று விவாதத்துக்கு எடுப்பதைத் தவிர்த்துக்கொண்டுள்ளோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில்,

வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்றுப் புதன்கிழமை ஒத்திவைப்புவேளை பிரேரணை ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் ஆகிய நான் முன்மொழிந்து நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழிமொழிந்து விவாதத்தை ஆரம்பிக்கும் வகையில் எமது தரப்பால் ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த பிரேரணை நேற்று பிற்பகல் 4.50 மணியளவில் விவாதத்துக்குக் கொண்டுவரப்படும் வகையில் நாடாளுமன்றில் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

குறிப்பாக எமது மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்காது, அவர்களது வலைகள் அழிக்கப்படுவதையும், படகுகள் சேதமாக்கப்படுவதையும், மீனவர்கள் தாக்கப்படுவதையும், கொல்லப்படுவதையும் இலங்கைக் கடற்படையும் இலங்கை அரசும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றமை தொடர்பில் குறித்த விவாதத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தோம்.

இந்நிலையில், நேற்று நண்பகல் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து அதிகாரி ஒருவர் தொடர்புகொண்டு, எம்மால் முன்னெடுக்கப்படவிருந்த விவாதம் தொடர்பில் கலந்துரையாடினார். அதன்போது நாம், எமது வட பகுதி மீனவர்களது கடற்தொழிலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில், இலங்கை கடற்படை நடவடிக்கை எடுக்காது எமது வட பகுதி மீனவர்களுக்கும் எல்லை தாண்டி வரும் மீனவர்களுக்கும் இடையில் மோதலைத் தீவிரப்படுத்தி பகைமையை வளர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் சபையின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் நாம் குறித்த விவாதத்தை ஏற்பாடு செய்துள்ளோம் என்பதைத் தெரிவித்தோம்.

அதன்போது, தூதரக அதிகாரி, இந்தப் பிரச்சினை தொடர்பில் தமது தரப்பிலிருந்தும் தாம் அக்கறை செலுத்துவதாகவும், மேற்படி மீனவர் பிரச்சினையானது யாழ்ப்பாணத்திலும், தமிழகத்திலும் ஒரு நெருக்கடி மிகுந்த சிக்கல் நிலைக்கு வந்துள்ளதாகவும், அந்த நெருக்கடி நிலையைத் தாம் புரிந்து கொண்டுள் ளதாகவும், அந்தவகையில் இப்பிரச் சினையைக் கட்டுப்படுத்துவதற்குத் தாம் முடிவெடுத்துள்ளதாகவும், தாம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிக்கும் முகமாக குறித்த விடயத்தை நாடாளுமன்றத்தில் விவாதிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

குறித்த தூதரக அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க மீனவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அவர்களது முயற்சிக்கு ஒத்துழைக்கும் வகையில் குறித்த பிரேரணையை நேற்று விவாதத்துக்கு எடுப்பதைத் தவிர்த்துக் கொண்டுள்ளோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## முடிந்தால் அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சவால்களுக்கு மத்தியில் நாட்டு மக்களைச் சிந்தித்து ஜனாதிபதியால் பல்வேறு தீர்மானங்களை எடுக்க நேரிட்டது. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சிந்தித்துத் தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை.

இரசாயன உரத்தைத் தடை செய்தோம். மக்களின் ஆரோக்கியத்துக்காக இந்தக் கடுமையான தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்தார். நாங்கள் எடுத்த அனைத்து விடயங்களிலும் எங்களுக்கு எதிராகப் பல தரப்பினர் செயற்பட்டனர்.

சீனாவின் தடுப்பூசிக்கும் தவறான கருத்துக்களை வெளியிட்டார்கள். உலகின் சிறந்த தடுப்பூசி எனக் கூறப்படும் பைசருக்கும் தவறான பிரசாரங்களை முன்னெடுத்தார்கள்.

இந்த நாட்டு விவசாயிகளின் பிரச்சினை என்ன என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஏன் என்றால் நாங்கள் விவசாய குடும்பத்தில் இருந்தே வந்தோம்.

நாங்களே நெல்லுக்கு அதிக கட்டணத்தைச் செலுத்தினோம். விவசாயிகள் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்ட காலங்களும் இருந்தன. எனினும், நாங்கள் அதனையும் மாற்றியமைத்தோம்.

அடுத்த தேர்தல்கள் குறித்து செயற்பட்டிருந்தால் போரையேனும் வெற்றி கொண்டிருக்க முடியாது. இறக்குமதியைத் தடை செய்தோம். அதனால் எவ்வளவு பெரிய சவாலுக்கு முகம் கொடுக்க நேரிடும் என எங்களுக்குத் தெரியும்.

எனினும், நாங்கள் நாட்டுக்காகவே அனைத்தையும் செய்தோம். இன்று முதல் ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையை உங்களிடம் எடுத்து வருகின்றோம்.

முடிந்தால் எதிர்க்கட்சியை அடுத்த தேர்தலில் வென்று காட்டுமாறு சவால் விடுக்கின்றேன் - என்றார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 276

**701.இந்த இரண்டு குழுக்களும் தங்களுக்கிடையே ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனவா?**

பிரபாகரனது குழுவினரிடமே விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள், பணம், உரித்துக்கள் எல்லாம் இருந்தன. மற்றவர்கள் நாள்கூலிக்கு வேலை செய்து அன்றாடம் காய்ச்சுவோரானார்கள். அப்படியிருந்தும் இரண்டு பக்கமும் அங்கத்தினர் ஆதரவாளர்களிடையே மற்றவரைக் குற்றம் சொல்லிப் பிரசுரங்களும் விநியோகித்தனர்.

சுந்தரம் குழுவினர் பிரபாகரனின் எதேச்சதிகாரப் போக்கையும், அரசியல் அடிப்படையற்ற மக்கள் அமைப்புக்களைக் கொண்டிராத இராணுவப் பலத்தையும், தனிமனித படுகொலைகளையும் நம்பிய போராட்டம் அழிவைக் கொண்டுவரும், அதில் மாற்றம் வேண்டும் எனத்தான் தாங்கள் செயற்குழு அமைக்கப் பாடுபட்டனர் எனர் தெரிவித்தனர்.

மாறாக, பிரபாகரன் குழுவினர் கடந்த நாள்களில் நடந்த எல்லாத் தவறுகளுக்கும் பிரபாகரனைக் குறைகூறுகின்றனர்



சந்ததியார்

எனவும், நடத்தப்பட்ட தனிமனிதப் படுகொலைகளை நியாயப்படுத்தியும் சுந்தரம் குழுவினர் மக்கள் அமைப்பு எனப் போராட்டத்தைத் திசை திருப்ப முற்படுகின்றனர் எனவும் அவர்களது முக்கிய நகர்வே இயக்கத்தில் ஆளுமையும் பிரபலத்திலும் இருந்த பிரபாகரனை அப்புறப்படுத்தி, விடுதலைப் போராட்டத்தை சீர்குலைப்பதுதான் என்ற விதங்களில் இருந்தது.

இவற்றை அவதானித்த சில நல்ல எண்ணங்கள் கொண்டவர்களும், இரண்டு பகுதிகளோடும் ஆதரவுத் தளங்களில் லண்டனிலிருந்து வேலை செய்தவர்களும் ஈடுபட்டு ஒருங்கிணைப்புகளை ஏற்படுத்த முன்வந்தார்கள். இவர்களில் இன்றைய புளொட் தலைவர் சித்தார்த்தனும் ஒருவர். அப்பொழுது அவர் புளொட்டிலோ எந்த இயக்கத்திலுமோ அங்கத்தவராக இருக்கவில்லை. இவர்களது ஏற்பாடுகளில் இரண்டு குழுக்களும் தங்களது ஆதங்கங்களையும் குறைபாடுகளையும் வெளிப்படுத்த, அவை உணர்ந்து கொள்ளப்படும் பட்சத்தில் இணைந்து வேலைசெய்ய ஏற்றுக்கொண்டனர். இரண்டு குழுக்களும் எங்கேயோ தெரிந்த நம்பிக்கை நட்சத்திரல்தான் இணங்கினார்கள். சிலரைத் தவிர, பெரும்பான்மையோருக்கு தனித்தனிக் குழுவாக இயங்குவதில் ஆர்வமில்லை. ஏதோ சேர்ந்து சாதித்து விட வேண்டும் என்ற துடிப்பு இருந்தது. அந்த ஆர்வங்களின் அத்திவாரமாக பன்முகத்தன்மை



உமா

கொண்ட ஜனநாயகத்தையும் மத்தியஸ்தங்களையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மத்திய குழுவும் அமைக்கப்படுமானால் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கு முடிவு தேடலாம் என்ற எண்ணப்பாங்கு பெருமளவில் இருந்தது. அந்த மத்திய குழு வாக்கெடுப்பின் அடிப்படையில் ஜனநாயகமாகத் தெரிவு செய்யப் பட வேண்டும் என்ற கருத்தும், அப்படித் தெரிவு செய்யப்படும் மத்தியகுழு பத்திரிகை வெளியிடுவது குறித்தும், போராட்டத் திட்டங்கள் பற்றியும் தீர்மானிக்கும் என்ற எண்ணமும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரபாகரனும் நந்தனும் கருத்தாக்க விவாதங்களில் ஈடுபட்டாலும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மறுத்துவிட்டனர். எவ்வளவோ பேசியும் அவர்கள் மறுத்ததால் அவர்கள் இருவரும் கலந்துகொள்ளாமலே வாக்கெடுப்பு நடந்து அதில் சாந்தன் 27 வாக்குகளைப் பெற்று எல்லோரதும் ஆதரவு பெற்ற போராளியாக மத்திய குழுவிற்குத் தேர்வானார். சாந்தனை அடுத்து கணேச ஐயருக்கும் அன்டனுக்கும் 26 வாக்குகளும், பிரபாகரன் 25 வாக்குகளையும் பெற்றனர். தணி 21 வாக்குகளையும், மனோ மாஸ்டர் 19 வாக்குகளையும், ராகவன் 16 வாக்குகளையும், மற்றவர்கள் 10 இற்கும் குறைவான வாக்குகளையும் பெற்றனர். மனோமாஸ்டர்மத்தியகுழுவில் இணைந்து கொள்ள விரும்பாததால் ராகவன் மத்திய குழுவில் இணைக்கப்படுகிறார். ஆறுபேர் கொண்ட மத்திய குழு பிரபாகரன், கணேச ஐயர், சாந்தன் , அன்டன், தணி, ராகவன் என்பவர்களை உள்ளடக்கி உருவாகிறது.

**702.மத்திய குழுவின் தெரிவை இரண்டு பிரிவினரும் ஏற்றுக் கொண்டார்களா?**

இந்தப் புதிய மத்திய குழுவில் பிரபாகரனுக்கு ஆதரவான நான்கு பேரும், சுந்தரம் குழுவைச் சார்ந்த இரண்டுபேரும் உறுப்பினராக இருந்தனர். பொது வேலைத் திட்டங்கள் பற்றி இணைப்புக்கு முக்கியமாக லண்டனிலிருந்து வந்து பணியாற்றிய ராஜாவுடன் ஒவ்வொருவரும் தனியாகப் பேசினர். ஆனால் அந்தச் சமயத்தில் தான் எந்த முடிவையும் ஏற்கவில்லை எனவும், பிரிந்து போகப் போகிறார் எனவும் பிரபாகரன் அறிவிக்கிறார். தனியாக ராஜா எவ்வளவு பேசியும் காரணம் எதனையும் முன்வைக்காது தனக்கு நம்பிக்கையில்லை என்று மட்டும் தெரிவித்து வெளியேறினார் பிரபாகரன்.

புதிய மத்திய குழு இப்பொழுது ஐந்து பேராக சுருங்கியது. இரண்டு பிரிவினருக்கும் இடையிலான வேற்றுமைகள் அரசியல் தளத்தை ஒட்டியே அமைந்திருந்தன. அங்கு பொதுத்தளம் இருக்கவில்லை. அரசியல் அனுபவமோ முதிர்ச்சியோ இல்லை.

பிரபாகரனைப் பொறுத்த மட்டில் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். அடி அடிக்குமேல் அடிதான் சிங்கள அரசுகளைப் பதப்படுத்தும் என்ற எண்ணம் மட்டுமே காணப்பட்டது. மற்றவர்களுக்கு மக்கள் வேலைகளுடன் தேசிய விடுதலை இயக்கத்தை வளர்ப்பது நோக்கமாக இருந்தது.

முதலில் வெளியேறினாலும் இணைக்கத்திற்குப் பாடுபட்டோரின் தொடர்ந்த ஈடுபாட்டால் அடுத்த மத்திய குழுக் கூட்டத்திற்குப் பிரபாகரன் சமுகமளித்து, அதேபோல் மேலும் மூன்று கூட்டங்களில் பங்கு பற்றி, தான் வைத்த இராணுவ நடவடிக்கையும் அதற்குரிய தலைமை மட்டும்தான் அவசியம் என்றும் வற்புறுத்துகிறார். அதற்கு மேல் பிரபாகரன் போக விரும்பவில்லை. மக்களிடையே வேலைகள் செய்வது அவசியமற்றது எனத் திடமாக நம்பினார். புதிய தாக்குதல்களை மேற்கொள்ளும் திட்டங்களும் ஆயுதங்களை கையாளத் தெரிந்தவர்களை



சித்தர்

இயக்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதம்தான் பிரபாகரனின் நோக்கமாக இருந்தன.

சுந்தரத்தின் ஆதரவாளர்களும் பிரபாகரனைச் சார்ந்தவர்களும் உறுப்பினர்களிடையே செய்த பிரச்சார வாதங்கள் அரசியல் திசைகள், தளங்கள் என்பதிலிருந்து மாறி தனி மனிதர்கள் மேலான காழ்ப்பான பிரசாரங்களாக நடந்தன. இரண்டு பகுதியினரும் ஏற்படுத்தப்பட்ட இணைவிலோ கூட்டுறவிலோ நாட்டம் கொள்ளவில்லை. மத்திய குழுவைப் பற்றியும் கவலைப்படவில்லை.

ஓர் இராணுவக் குழுவிற்கான அதிகாரி போன்ற தனித்தலைமை ஒன்றே தேவையானது என்பதை வலியுறுத்தி,



பிரபா

மத்தியகுழு தேவையற்றது என அவர்களுடனும் பிரபாகரன் முரண்பட்டார்.

இரண்டு குழுக்களும் தனியாக இயங்கும் போக்குகளை வெளிப்படுத்த இருபகுதிகளுமே வேறு உறவுகளைத் தேட, சென்னையில் இருந்த உமாமகேஸ்வரன் சுந்தரத்தின் பழைய தொடர்புகளால் நாட்டிற்கு வரவழைக்கப்பட்டு அவர்களோடு சேர்ந்து இயங்க விருப்பம் தெரிவிக்கிறார். உமாமகேஸ்வரனும் இராணுவக் கட்டுப்பாட்டில் அமைந்த இயக்கத்தையே பிரபாகரனோடு சேர்ந்து நடத்தியமையால் சில ஆதங்கக் குரல்களும் எதிர்ப்புக்களும் இருந்தாலும், கடைசியில் இணங்கிச் செயல்பட ஏற்றுக்கொண்டு மேற்கண்ட நடவடிக்கைகளில் இறங்கி தங்கள் குழுவிற்குப் பெயர் ஒன்றைத் தேடினார்கள். சுந்தரம் முன்மொழிந்த தமிழீழ விடுதலைக் கழகம் (Plote) என்பது ஏற்றுக் கொள் ளப்பட்டு நவம்பர் 1979 இல் இது உரு வாக்கம் பெற்றது. தங்களது சஞ்சிகைக் காகப் 'புதியபாதை' என்று பெயரைத் தெரிவு செய்தார்கள். உமாமகேஸ்வ ரனின் தொடர்புகளால் இறைகுமாரன், உமைகுமாரன், சந்ததியார் போன்றோர் இணைந்து கொள்கிறார்கள். அத்தோடு தங்களது மத்திய குழுவிற்கு சாந்தன், உமா மகேஸ்வரன், சுந்தரம், சந்ததியார் ஆகியோர் தெரிவாகினர். முதலில் வெகுஜன அமைப்புக்களை உருவாக்கி அதன் பலத்தில் இராணுவ தாக்குதல்கள் திட்டமிடப்பட்டன.

(வளரும்)



## புத்தாக்க அரங்க இயக்கத்தின் பன்னாட்டு அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 13 நிகழ்வு மாசி மாதம் 13,14,15,16,17 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை கிழக்குப்பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சு.சந்திரகுமார் கூத்தரங்கு ஆற்றுகைமைய கற்றல் கற்பித்தல் என்னும் தலைப்பிலும் 14.02.2022 திங்கட்கிழமை பேராசிரியர் ந.இளங்கோ (இந்தியா) நகைச்சுவை அரசபையிலிருந்து அபத்தம் வரை என்ற தலைப்பிலும் 15.02.2022 செவ்வாய்க்கிழமை கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்தர் அழகியற்கற்கை நிறுவகம் கட்புலத்துறை தலைவர் கலாநிதி சு.சிவரட்ணம் சிறுவர்களின் ஆளுமைவிருத்தியில் பாரம்பரிய அவைக்காற்றுகைகள் என்னும் தலைப்பிலும் 16.02.2022 புதன்கிழமை வானொலி தொலைக்காட்சி நாடகச் செயற்பாட்டாளர் பீ.விக்னேஸ்வரன் வானொலி நாடகம் தொலைக்காட்சிநாடகம் - மேடை நாடகம் ஓர் பார்வை என்னும் தலைப்பிலும் 17.02.2022 வியாழக்கிழமை அரங்கச் செயற்பாட்டாளர் செ.ரஜீவ் மலையக காமன்கூத்து ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளார் .

நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்கள்.

இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச் சொல் ஜரிஎம் ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்

## கச்சதீவுக்கு இந்திய பக்தர்களை அனுமதிப்பது தொடர்பான கோரிக்கைகளை உரிய தரப்புகளுக்கு அனுப்பியிருக்கின்றோம்

### அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு



கச்சதீவு திருவிழாவுக்கு இந்திய பக்தர்கள் செல்வது தொடர்பான கோரிக்கைகளை நாங்கள் உரிய தரப்புகளுக்கு அனுப்பியிருக்கின்றோம். அங்கிருந்து அனுமதி கிடைக்கும் பட்சத்தில் இந்தியாவிலிருந்தும் பக்தர்கள் பங்கேற்க முடியும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

கச்சதீவு திருவிழா தொடர்பில் ஊடகவியாளர் கேள்வி எழுப்பிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –


எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்பக்கட்ட கூட்டத்திலேயே சுகாதார நிலைமை மற்றும் கொரோனா நிலைமைகளை கருத்தில் எடுத்து சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கமைய 500 உள்ளூர் பக்தர்கள் செல்வதற்கு மாத்திரம் அனுமதி கிடைத்திருந்தது.

இருந்தபோதும் தற்போது ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்ற வேளையில் இந்திய பக்தர்களையும் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கோரிக்கைகளை நாங்கள் உரிய தரப்புகளுக்கு அனுப்பியிருக்கின்றோம். அங்கிருந்து அனுமதி கிடைக்கும் பட்சத்தில் இந்தியாவிலிருந்தும் பக்தர்கள் பங்கேற்க முடியும்.

இவ்வாறான கோரிக்கை தொடர்பாக சுகாதார அமைச்சு மற்றும் கலாசார அமைச்சுக்கு அறிவித்திருக்கின்றோம். அனுமதி கிடைக்கும் பட்சத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும். இந்த விடயத்தில் சில முன்னெடுப்புக்கள் எடுக்கப்படுகின்றன என அறிய முடிகின்றது. – என்றார்.

## மட்டு. திராய்மடுவில் சடலமாக மீட்கப்பட்ட அதிபர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்கிறார் சகோதரி



மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள திராய்மடு பகுதியில் சடலமாக மீட்கப்பட்டவர் அடையாளம் காணப்பட்டமையுடன் பிரேத பரிசோதனையில் உயிரிழந்தமைக்கான காரணம் கண்டுபிடிக்கப்படாததையடுத்து சடலத்தின் உடற் கூறுகள் அரச பகுப்பாய்வுக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை திராய்மடு முருகன் கோவிலுக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டவரை செல்வநாயகம் வீதியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான பாடசாலை அதிபர் செபநாயகம் மங்களச்சந்திரா(வயது 53) என அவரது சகோதரி அடையாளம் காட்டியுள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை சகோதரியிடம் ஒப்படைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் உத்தரவிட்டார்.

சடலமாக மீட்கப்பட்ட மங்களச்சந்திராவை அவரது மகனும், மகனின் நண்பன் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தரும் சேர்ந்து மருத்துவமுறையில் படுகொலை செய்து உடலை திராய்மடுவில் வீசியுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவரது சகோதரியான கல்வியியல் கல்லூரி விரிவுரையாளரான செபநாயகம் சந்திரகலா தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

எனது சகோதரன் ஆரையம்பதி நவரட்ணம் வித்தியாலய அதிபராக கடமையாற்றி வந்தார். இவருக்கு 18 வயதில் ஒரு மகளும் 24 வயதில் ஒருமகனும் உள்ளனர்.

மகன் கிழக்கு பல்கலைக்கழகத்தில் 4 ஆம் ஆண்டில் மருத்துவபீட மாணவனாகக் கல்வி பயின்று வருகின்றான். அதே பீடத்தில் கல்வி கற்றுவரும் இவனின் நண்பன் உடன் சேர்ந்து பிழையான நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளான்.

இது தொடர்பாக கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் மகனையும் அவனது நண்பனையும் எனது சகோதரன் எச்சரித்துள்ளார். இந்த நிலையில் மகனை கணவர் எச்சரித்ததையடுத்து, கணவன் மனைவிக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் கணவனுக்கு எதிராக மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து கொலை செய்யப்பட்ட சகோதரனை பொலிஸ் நிலையத்தில் உள்ள குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி இருவரையும் அழைத்து நீதிமன்றத்தில் வழக்கு தொடராது சகோதரனை அங்கு செல்லக்கூடாது என குறிப்பிட்டுள்ளார். இதனையடுத்து சகோதரன் எனது வீட்டிலும் பின்னர் எனது சகோதரர் வீட்டிலுமாக சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக இருந்துள்ள நிலையில் அவர் பிள்ளைகளை விட்டுவிட்டு இருக்க முடியாது மன வேதனையடைந்தார்.

இதனைத் தொடர்ந்து சகோதரனை எமது உறவினர்கள் அழைத்துக்கொண்டு பொலிஸ் நிலையத்துக்கு சென்று குறித்த பொலிஸ் அதிகாரியை சந்தித்து வீட்டில் சென்று இருக்க வேண்டும், அதற்கான அனுமதியைத் தருமாறு கோரினார்.

அப்போது அந்த பொலிஸ் அதிகாரி எனக்கு கப்பமாக 2 கியூப் மணல் தருமாறும் எனது மனைவி கடமையாற்றும் இன்சூரன்ஸ் கம்பனியில் நீ இன்சூரன்ஸ் எடுக்கவேண்டும், அப்போதுதான் உன்னை வீட்டிற்கு செல்ல அனுமதிப்பேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து தனது பிள்ளைகளை விட்டு பிரிந்திருக்க முடியாத அவர் மணலை வாங்கி கொண்டு பொலிஸ் அதிகாரியின் வீட்டிற்கு கொண்டு சென்று பார்த்ததையடுத்து அந்த அதிகாரியின் மனைவி வேலை பார்க்கும் இன்சூரன்ஸ் கம்பனிக்கு சென்று அவர் மூலமாக 50 ஆயிரம் ரூபா பணத்தை செலுத்தி தனக்கு இன்சூரன்ஸ் செய்துள்ளார்.

அதன்பின்னர் எனது சகோதரனை பொலிஸ் அதிகாரி வீட்டின் மேல்மாடியிலுள்ள மேல் தளத்தில் எந்த விதமான வசதிகளும் இல்லாத பகுதியில் இருக்க அனுமதித்ததுடன் மனைவி பிள்ளைகளுடன் பேசகூடாது எனக் கட்டளையிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் மகனின் நண்பனை வீட்டிற்கு வருவதை தடைசெய்ய முயற்சித்தபோது மகனுக்கு அவனது தாயார் உடந்தையாக செயற்பட்டு வருவதால் தொடர்ந்து பிரச்சினை ஏற்பட்டமையுடன், மனைவியார் குறித்த பொலிஸ் அதிகாரி ஊடாக கணவனை மிரட்டி வந்துள்ளார்.

இவ்வாறு தினமும் பிரச்சினை ஏற்பட்டுவந்த நிலையில், மகனின் நண்பனின் தாயார் ஓர் ஆசிரியர் என்பதால், அவரை அழைத்து நான் இந்த பிரச்சினை தொடர்பாக தெரிவித்ததுடன் 3 தடவைக்கு மேலாக அவருக்கு தொலைபேசி ஊடாக அறிவுறுத்தல் செய்தேன்.

அதற்கு அவர்கள் ஏன் ஏன்று கூட கவனம் செலுத்தவில்லை. கடந்த வியாழக்கிழமை 3 ஆம் திகதி சகோதரன் மங்களச்சந்திரா எனது வீட்டிற்கு வந்து தாய், தந்தையரை பார்த்துவிட்டு மதிய நேர உணவை உண்டுவிட்டு சென்றவர். அடுத்த தினமான வெள்ளிக்கிழமை திராய்மடுவில் உயிரிழந்த நிலையில் சடலமாக கிடப்பதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்று பார்த்தோம். அப்போது அவரைக் கொலை செய்துவிட்டு கொண்டுவந்து போட்டுள்ளனர் என்பது தெளிவாக தெரிகின்றது.

ஏன் என்றால் அவரின் உடலில் எந்தவிதமான காயங்களும் இல்லை என்பதுடன் சடலம் இருந்த இடத்துக்கு அருகில் மருந்து ஏற்றும் ஊசி, சிறிஞ் என்பன மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை பிரேத பரிசோதனையில் அவர் மது பாவித்ததார் என்றோ அல்லது மாரடைப்பாலோ உயிரிழக்கவில்லை எனக் கூறப்பட்டது. இந்த உயிரிழப்புக்கான காரணம் அறிய முடியாததால் உடலின் முக்கிய உறுப்புக்கள் வெட்டி எடுத்து அரச பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையுடன், சகோதரனின் உடலை நான் நீதிமன்றில் கேட்டபோது நீதிமன்றம் அதனை என்னிடம் ஒப்படைக்க உத்தரவிட்டது.

இருந்தபோதும் பொலிசாரிடம் மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் அவனது நண்பன் ஆகியோர் இவரைக் கொலை செய்துள்ளனர் என நான் முறைப்பாடு செய்தேன்.

பொலிஸார் இது தொடர்பாக விசாரணை செய்யவில்லை. எனவே எனது சகோதனை அவரது மகன், அவனது நண்பன் மற்றும் பொலிஸ் அதிகாரி ஆகியோர் திட்டமிட்டு மருத்துவ முறையில் படுகொலை செய்துள்ளனர். எனவே எனது சகோதரனுக்கு நீதிவேண்டும். - என அவர் கண்ணீர்மல்க தெரிவித்தார் .

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.02.2022இல் வெளியிடப்பெற்றது.